**OS.No.491/2024, Dated 12.02.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 12th day of February 2026.

**வா.சா.1 –ஜெயராமன் த/பெ. அண்ணாமலை வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. ஒரு போகத்திற்கு எனக்கு ரூ.15,000/– வருமானம் வரும். இது தவிற நான் வட்டிக்கு கொடுக்கும் தொழிலும் செய்கிறேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு மட்டும் தான் கடன் கொடுத்துள்ளேன். வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை. நான் பிரதிவாதிக்கு ரூ.1 லட்சம் கடனாக கொடுத்தேன். என்னிடம் பிரதிவாதியும் அவரது மனைவியும் வந்து கடன் கேட்டார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அந்த சமயத்தில் பிரதிவாதிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அவரது மனைவி மட்டும் தான் கடன் கேட்க வந்தார் என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தின் படி நான் ரூ.1 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றாலும், ரூ.50,000/–ம் தான் கடன் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. மனைவி பெயரில் நிலம் இல்லாத காரணத்தால் அவர் கேட்ட கடனுக்கு பிரதிவாதி பெயரில் உள்ள இடத்தை அடமானம் பெற்றேன் என்றால் சரியல்ல. கடன் பத்திரத்தில் 2 பைசா வட்டி என்று குறிப்பிட்டுவிட்டு 3 பைசா வட்டி என்று கேட்டேன் என்றால் அவர் மாதம் மாதம் வட்டி தரவில்லை நீதிமன்றம் மூலம் கேட்பதால் 3 பைசா வட்டி கேட்டுள்ளேன். 3 பைசா வட்டி கேட்பது சட்டப்படி தண்டிக்கதக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது மனைவியும் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் விவசாய வேலை செய்கிறார்கள். பிரதிவாதியின் மனைவி வேறு என்னிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் இந்த கடனுக்கான வட்டிக்காக ரூ.58,000/–க்கு பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டை பிரதிவாதியின் மனைவி எனக்கு எழுதி கொடுத்தார். அந்த கடனுறுதி சீட்டை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கடன் கேட்பதும், வாங்குவதும் பிரதிவாதியின் மனைவி மட்டும் தான் என்றாலும், பிரதிவாதி இல்லை என்றால் சரியல்ல. இருவரும் தான் கடன் வாங்கினார்கள். பிரதிவாதி அவரது பிள்ளைகளின் படிப்பு செலவிற்காக கடன் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் வீடு கட்டும் செலவிற்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் படிப்பு செலவிற்காக என்று தான் கடன் வாங்கினார்கள். அடமான பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லையா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. 2014ம் ஆண்டு முதல்

2019ம் ஆண்டு வரை பிரதிவாதியின் மனைவி மாதம் மாதம் வட்டியும் அசலும் சேர்த்து ரூ.3000/- செலுத்தி வந்தார் என்றால் இல்லை. அவ்வாறு வட்டி செலுத்தியதற்கு இரசீது கேட்டதற்கு அவ்வாறு கொடுக்கும் பழக்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதையும் மீறி கேட்டதற்கு பிரதிவாதியின் மனைவியை மிரட்டினேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ரசீது கொடுக்கவில்லை என்பதால் தான் 2019ம் ஆண்டிற்கு பின்னிட்டு பிரதிவாதியின் மனைவி வட்டி செலுத்தவில்லை என்றால் அவர் வட்டியே செலுத்தவில்லை. பிரதிவாதியின் மனைவி ரூ.50,000/- வாங்கிய கடனுக்கு ரூ.1,00,000/- என்று நான் அடமான பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு அவரால் பதில் அறிவிப்பு அனுப்ப இயலவில்லை என்றால் சரியல்ல. கூலி வேலை செய்து பிரதிவாதியின் மனைவி செலுத்திய தொகையை கழித்திருந்தாலே நான் இந்த தாவா தாக்கல் செய்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது மனைவியும் கூலி வேலை தான் செய்து வருகிறார்கள் என்றாலும், தற்போது பிரதிவாதிக்கு உடல் நிலை சரியில்லாததால் அவரால் வேலையும் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி விவசாய கூலி என்பதால் அவரிடம் 6 சதவீத வட்டி தான் கேட்க முடியும் என்றால் சரியல்ல. எனவே தாவா அவசியமற்றது என்றாலும், பிரதிவாதி பெயரில் அதிகபடியான வட்டி கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.12 18:19:56 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி